செய்தி வெளியீடு எண்.421/2010 நாள்: 11.6.2010

**வேலூர் மாவட்டத்தில் குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து துறை அலுவலர்கள் உறுதிமொழி ஏற்றனர்.**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன்,இ.ஆ.ப., அவர்கள் வாசிக்க

" இந்திய அரசியலமைப்பின் விதிகளின் படி கல்விபெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை ஒருபோதும் எந்தவித பணிகளிலும் ஈடுபடுத்தப் மாட்டேன் எனவும், அவர்கள் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிப்பேன் எனவும், குழந்தை தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும், தமிழகத்தை குழந்தை தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு என்னால் இயன்றவரை பாடுபடுவேன் எனவும் உளமார உறுதி கூறுகிறேன் "

என தொடர்ந்து அனைத்து துறை அலுவலர்கள் கூறி உறுதி மொழி ஏற்றனர்.

2008-09-ஆம் ஆண்டில் குழந்தை தொழிலாளர் முறையை அகற்றுவதில் சிறப்பாக செயல்பட்ட திருப்பத்தூர் நகராட்சிக்கும், காவேரிப்பாக்கம், ஆலங்காயம், கழிஞ்சூர் பேரூராட்சிகளுக்கும், கொணவட்டம், மேலபுலம், கொண்டசமுத்திரம், அம்சமங்கலம், செம்பேடு ஆகிய ஊராட்சிகளுக்கும், கேடயமும், சான்றிதழும் வழங்கியதுடன் 2009-10 –ஆம் ஆண்டு குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளியில் படித்த 10-ம் வகுப்பு மற்றும் +2 தேர்வில் தேர்ச்சி பெற்று இம்மாவட்டத்தில் முதல் 5 இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ 500/- வீதம் 10 மாணவ, மாணவிகளுக்கு மொத்தம் ரூ 5000/-க்கான காசோலைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.நா.அருள்ஜோதி அரசன், குழந்தை தொழிலாளர் நல்வாழ்வு திட்ட இயக்குநர் திரு.மு.ராஜபாண்டியன், மகளிர் மேம்பாட்டு திட்ட அலுவலர் திரு.பிச்சைக்கண்ணு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.விஜயகுமார், அலுவலக மேலாளர் (பொது) திரு.கோவிந்தராஜன், அனைத்துத் துறை அலுவலர்கள், குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளியின் ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர் - 9.